1974 சனவரி 24]

வலாகக் கிடைத்த தொகையா? ஆக்சுவலாகக் கிடைத்த தொகை எவ்வளவு? ஏலத்தொகைக்கும் ஆக்சுவலாகக் கிடைக்கும் தொகைக்கும் வித்தியாசம் எவ்வளவு இருக்கும் என்று பார்த்தால் தெரியும். கட்ட முடியாமல் விட்டுவிட்டுப் போய்விடுவார்கள். எனவே வசூல் எவ்வளவு ஆயிற்று? எத்தனை கோடி ரூபாய் நஷ்டம்? மேலும், சாராயத்தை வேறு தொழிலுக்குப் பயன் படுத்துவது பற்றிச் சொன்னுர்கள். என்ன தொழிலுக்குப் பயன்படுத்தப் போகிருர்கள்? இவ்வளவு சாராயத்தையும் எந்தத் தொழிலுக்குப் பயன்படுத்தப் போகிருர்கள் என்று விளக்கமாகச் சொன்னுல் பரவாயில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நான் கொடுத் திருக்கின்ற கணக்கு ஏலத்திற்குக் கோரப்பட்ட தொகை. அதைக் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது 30.69 கோடி ரூபாய் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கே இந்தக் கணக்குதான் இப் பொழுது தரப்பட்டுள்ளது. வசூல் அந்தந்த மாதத்திலே வசூலாகிறது. இன்டஸ்ட்ரியல் ஆல்கஹால், இன்டஸ்ட்ரிசுக்குப் பயன்படுத்தலாம் என்ற குறிப்பிருக்கிறது. எந்தெந்த இன்டஸ்ட்ரிசுக்குப் பயன்படுத்தலாம் என்ற விவரம் அரசாங்கத் தின் பரிசீலனையில் இருக்கிறது.

### திசையன்விளையில் கள் குடியால் இறந்தவர்கள்.

*53 வின—திரு. கே. டி. கே. தங்கமணி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையில், 12–6–1973-ஆம் நாளன்று அல்லது அந்நாளளவில், கள் குடித்து 8 பேருக்கு மேல் இறந்து விட்டார்கள் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ), (இ) & (உ) 3–6–1973 அன்று, திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், குட்டம் கிராமத்திலுள்ள சேகரிப்பு முனையில் 17 பேர் கள் குடித்தனர். அவர்களில், 8 பேர் மருத்துவ சிகிச்சை அளிப் பதற்கு முன்னரேயே உடனடியாக இறந்தனர். எஞ்சிய 9

பேர்கள் மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் பிழைத்துக்கொண்டனர். இறந்து போன 8 பேர்களின் குடல்கள் முதலியவற்றையும், கைப்பற்றப்பட்ட கள்ளையும் இரசாயனப் பகுப்பாய்வு செய்து கொடுக்கப்பட்ட அறிக்கைகளிலிருந்து பூச்சி கொல்லி மருந்தாகப் பயன்படுத்தப்படும் நச்சுக் கலப்பு "பாராத்தியன்" கலந்திருப்பது தெரிய வந்தது. இரண்டு வழக்குகளுக்கான குற்றப் பத்திரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்குகள் விசாரணையில் உள்ளன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இம்மாதிரி கள் குடிப்பவர்களை, சாராயம் குடிப்பவர்களை விஷத்தையும் கொடுத்துக் கொலை செய்வது என்ற முறையில் சமீபத்தில் 8 பேர் இறந்திருக்கிறார்கள். இது கடுமையான குற்றம். இந்த மாதிரிச் செய்பவர்கள் மீது கொஞ்சம் தீர்க்கமாக நடவடிக்கை எடுத்து கேஸ் போட்டு தண்டனை அளித்தால்தான் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். இதிலே அரசு என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நாகர்கோயில் ஊராட்சி ஒன்றிய முன்னாள் தலைவரான திரு. சி. ஆர். நடேசன் என்பவர் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், பரதர் உவரியிலுள்ள 71-ஆம் எண் கள்ளுக்கடையின் உரிமதாரர் ஆவார். இக்கடைக்கு மாதக் குத்தகை ரூ. 4,055, உவரியைச் சேர்ந்த திரு. துரைபாண்டியன் (முன்னாள் எம்.எல்.ஏ.) மேற்பார்வையின் கீழ், வேலையாட்கள் மூலம் இக்கடை நடத்தப்பட்டு வந்தது. திசையன்விளை காவல் நிலையத்தில், "நச்சுக் கலந்திருந்ததால் ஏற்பட்ட இறப்பு குறித்து 74/73-ஆம் குற்ற எண்ணிலும், திருவாளர்கள் இசக்கிமுத்து கோனார் (உரிமதாரரின் ஏஜெண்ட்) எண் 71, உவரி கள்ளுக்கடை உரிமைதாரான சி. ஆர். நடேசன் ஆகியோர் மீது தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு ஆயத்தீர்வைச் சட்டத்தின் 61, 63-வது பிரிவுகளின்கீழ் 76/73-ஆம் குற்ற எண்ணிலும் காவலர் இரண்டு வழக்குகளைப் பதிவு செய்துள்ளனர். திசையன்விளை காவல் நிலைய குற்ற எண் 74/73-ல் இ.பி.கோ. 304 (எ) பிரிவின்படி 9–11–1973-ல் திருநெல்வேலி கூடுதல் செய்யப் முதல்தர நீதிபதி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. குற்ற எண் 76/73-ல் தமிழ்நாடு அரசு ஆயத்தீர்வைச் சட்டம் பிரிவு 61 (எஸ்) மற்றும் 63 (பி) பிரிவுகளின்படி

*1974 சனவரி 24]*

குற்றவாளி உரிமைதார் நடேசன் நாடார் மீதும், ஏஜண்ட் இசக்கி முத்துக் கோனார் மீதும் 9—11—1973-ல் நாங்குநேரி துணை நீதிபதி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இசக்கி முத்துக் கோனார் பெயிலில் விடப்பட்டுள்ளார். நடேசன் தலை மறைவாகிவிட்டார். நடேசனைக் கைதுசெய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வழக்கு விசாரணைக்குப் பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இறந்துபோன எட்டு குடும்பத் தாரும் ஏழைகள். அவர்களுடைய குடும்பத்தாருக்கு அரசாங்கத் தரப்பிலிருந்து உதவி செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அப்படி ஒரு குறிப்பு அரசாங்கத்திடம் இல்லை.

*Prices of pesticides*

*140 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken by the Government to reduce the price of pesticides in this State?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** வேளாண்மைத் துறை விவசாயக் கிடங்குகளில் பூச்சிகொல்லி மருந்து லாபம் அற்ற விலையில் விற்கப்பட்டு வருகிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** இப்போது இருக்கக்கூடிய பிரச் சினை போதுமான மருந்து கிடைக்கவில்லை என்பது. முன்பு சர்க்கார் தரப்பில் அக்ரோ இண்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன் மூலம் மருந்துகளுக்கு ஏஜன்சி எடுத்து இப்போது கைவிட்டு விட்டார் கள். விவசாயிகளுக்குத் தேவையான மருந்துகளை வாங்கி பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகக் கொடுப்பதற்கு விவசாயி களுக்குக் குறுகிய காலக் கடன் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அக்ரிகல்சுரல் டெப் போவில், எந்த ஊரில் மருந்துகள் இல்லையென்று தெரிகிறதோ, உடனே மேற்கொண்டு பூச்சி மருந்துகள் அனுப்பப்படுகின்றன. குறிப்பாக பி.எச்.சி. என்ற மருந்துதான் விவசாயத் துறையி னரால் ஊக்கப்படுத்தப்படுகிறது. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பி.எச்.சி. மருந்தை விரும்பி வாங்குகிறார்கள். அக்ரோ